**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.97/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்தோஷ் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : மோகனகிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : -- |
| தொழில் : | மென்பொருள் பொறியாளர் | வட்டம் | : பெங்களூர் |

**27.01.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. வாதியை குறுக்கு விசாரணை செய்யும்போது மனைவரைபடத்தின் நகல் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்பட்டடது. 06.08.1981ம் தேதியிட்டு பிரபாவதியம்மாள் கதிர்வேலு முதலியாருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 14.09.1983ம் தேதியிட்டு அண்ணாமலை அவர்களுக்கு கதிர்வேலு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 19.08.1991ம் தேதியிட்டு கதிர்வேலு முதலிக்கு அண்ணாமலை அவர்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.07.2014ம் தேதியிட்டு பிரபாவதியம்மாள் எனக்கு எழுதி கொடுத்த தான ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(தான ஆவணம் பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 12.09.2014ம் தேதியிட்டு நான் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு எழுதி கொடுத்த தான ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(தான ஆவணம் பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சென்னை உயர்நீதிமன்ற நீதிபேராணை மனு எண்.15484/2017ல் 20.06.2017ம் தேதியிட்ட உத்தரவு தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி அமிர்தாபுரம் புல

எண்.69க்கான புல வரைபடம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருவள்ளூர் மண்டல நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலக பொது தகவல் அலுவலர் 02.02.2016ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. திருத்தணி நகராட்சி ஆணையர் 30.05.2014ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் 05.05.2017ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் 05.05.2017ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)